**நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டட் - 2014/2015**

-----------------------------------------------------------------

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டட்டின் 2015மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்க சமர்ப்பிக்கப்பட வேண்டும் என் நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமையஇந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

--------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் அந்த நிதிக்கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயமொன்றினை வெளியிடல் எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று,இலாப நட்டக்கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுமா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**1.5 கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலை**

-------------------------------------------------

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டட்டின் நிலைத்த தன்மை எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அறிக்கையிடும் திகதியில் உள்ளபடியாக கம்பனிக்கு சொந்தமான வாழைச்சேனை தொழிற்சாலை மீளாய்வாண்டின் போது அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருந்ததுடன், 2011 நவம்பர் 15 ஆந் திகதியில் உள்ளபடியாக எம்பிலிபிட்டிய தொழிற்சாலை தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2015 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியானது ரூபா 132 மில்லியனான மற்றும் அதற்கு முன்னைய வருடத்தில் ரூபா 209 மில்லியனான நட்டமொன்றினை பதிவு செய்திருந்தது. அவ்வாறே, 2015 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 1,090 மில்லியனான மறை

தேறிய மீதியினை பதிவு செய்திருந்தமை காரணமாக கம்பனியின் நிலைத்த தன்மையானது நிச்சயமற்றது என்படு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். இதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீதி நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றுமொரு கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன், அது தொடர்பில் பாதகமான அபிப்பிராயமொன்று 2017 பெப்ரவரி 02 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களின் ஆரம்ப மீதிகளை சான்றுபடுத்துவதற்கு பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) கம்பனியினால் அதன் வளாகங்களுக்கு மற்றும் அறிக்கைகளுக்கு பௌதீக ரீதியாக பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படாமையால், வாழைச்சேனை தொழிற்சாலையில் ரூபா 38,344,000 தொகையான மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்,ரூபா 177,767,000 தொகையான மொத்த சொத்துக்கள் மற்றும் ரூபா 406,086,000 தொகையான நடைமுறையல்லாத பொறுப்புக்கள் ஆகியவற்றுக்காக போதியளவான சான்றுகள் இல்லாதிருந்தமையால் அந்த மீதிகளை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) எம்பிலிப்பிட்டிய தொழிற்சாலை 2011 நவம்பர் 15 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான உடன்படிக்கைடியொன்றோ அல்லது போதியளவிலான சான்றுகள் இல்லாதிருந்தமையால் தொழிற்சாலையில் ரூபா 17,886,000 தொகையான மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்,ரூபா 11,202,000 தொகையான மொத்த நடைமுறை சொத்துக்கள் மற்றுமு் ரூபா 483,757,000 தொகையான மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்களை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மெய்மையாய்விற்காக அதன் அறிக்கைகள் இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்களினுள் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 33,376,922 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதியினை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

(உ) ஆண்டிறுதி இருப்புக் கணிப்பீட்டினை பௌதீக ரீதியில் அவதானிக்க முடியாமை மற்றும் இருப்பு பெறுமதிகள் மற்றும் அளவுகளுக்குரிய அறிக்கைகள் இல்லாதிருந்தமையின் காரணமாக ரூபா 15,926,363 தொகையான இருப்பினை மெய்மையாய்விற்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஊ) நேரடியான மீதி உறுதிப்படுத்தல்கள் இல்லாதிருந்தமையின் காரணமாக மற்றும் மாற்று கணக்காய்வு முறைகளினூடாக மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான தகவ்லகள் மற்றும் அறிக்கைகள் இல்லாதிருந்தமையின் காரணத்தால் ரூபா 257,200,355 தொகையான வியாபார மற்றும் ஏனை பெற வேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 471,307,505 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(எ) மீதிகளை மெய்மையாய்வுக்கு உட்படுத்த போதியளவானதும் பொருத்தமானதுமான சான்றுகள் இல்லாதிருந்தமையால் ரூபா 45,087,534 தொகையான மூலதன ஒதுக்கங்கள் மற்றும் ரூபா 41,777,052 தொகையான வெளிநாட்டு கொடைகளின் மீதிகளை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஏ) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தினை செலவு வைப்பதற்குரிய அங்கீகாரங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையின் காரணத்தால் ரூபா 103,258 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட இலாப மீதியினை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஐ) நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களை தவிர்த்தல், கடன் உடன்படிக்கைகள் மற்றும் கடனுடன் தொடர்புடைய ஏனைய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையின் காரணத்தால் ரூபா 159,645,648 தொகையான வெளிநாட்டு கடன் மீதிகளை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் மற்றுும் ஆண்டினுள் பணிக்கொடை ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையால்ரூபா 100,681,254 தொகையான பணிக்கொடை கொடுப்பனவு மீதிகளை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஓ) நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வருமானத்தின் முழுமையான தன்மை மற்றும் விற்பனைக் கிரயத்தின் சரியான தன்மை மெய்மையாய்வுக்குட்படுத்த போதியளவிலான சான்றுகள் இல்லாதிருந்தமையால்,ரூபா 74,905,615 தொகையான வருமானம் மற்றும் ரூபா 234,140,251 தொகையான விற்பனை கிரயம் ஆகியவற்றை மெய்மையாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ஔ) பெறுமதி சேர் வரி, தேசிய கட்டிடங்கள் வரி, பொருளாதார சேவைக் கட்டணங்கள் மற்றும் வருமான வரி போன்ற சட்டரீதியான வரிகளுக்காக கம்பனி கடப்பட்டுள்ளமையால், கம்பனியால் இந்த வரிகளுக்காக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அல்லது நிதிக்கூற்றக்களில் அவ்வாறாகன நிலுவை மீதிகளுக்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கான போதியளவான கணக்காய்வு சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை.

(க) பின்வரும் செலவினங்களை சான்றுபடுத்துவதற்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

i. ரூபா 20,705,764 தொகையான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களை சான்றுபடுத்துவதற்குரிய தனிப்பட்ட கோவைகள், சம்பளப் பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவிற்கான அங்கீகாரங்கள்.

ii. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 528,085 தொகையான கொடுப்பனவுகளை சான்றுபடுத்துவதற்கான கொடுப்பனவு பத்திரங்கள் மற்றும் கணிப்பிடல்கள் மற்றும் கொடுப்பனவுடன் தொடர்புடைய தகவல்கள்.

iii. ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,112,340 தொகையான கொடுப்பனவுகளை சான்றுபடுத்துவதற்குரிய கணிப்பிடல்கள் மற்றும் கொடுப்பனவுடன் தொடர்புடைய தகவல்கள்.

iv. வீதவரி மற்றும் வரியுடன் தொடர்புடையதாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,756,229 தொகையான கொடுப்பனவுகனை சான்றுபடுத்துவதுடன் தொடர்புடைய மூல ஆவணங்கள் மற்றும் வரி உடன்படிக்கைகள்.

v. ஒப்பந்த சேவை கட்டணங்களுடன் தொடர்புடைய ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,440,467 தொகையான கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரங்கள், ஒப்பந்த ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய ஆவணங்கள்.

vi. வாகன வாடகையுடன் தொடர்படையதாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,035,000 தொகையான கொடுப்பனவுகளுக்காக அங்கீகாரங்கள், வாடகை உடன்படிக்கைகள் மற்றும் கொடுப்பனவுகனை சான்றுபடுத்துவதுடன் தொடர்புடைய மூல ஆவணங்கள்.

vii. பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மற்றும் அகற்றப்படும் கடுதாசிகள் தொடர்பில் செலுத்தப்பட்டிருந்த முறையே ரூபா 2,852,751 மற்றும் ரூபா 3,222,458 தொகையான கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரங்கள் மற்றும் கொடுப்பனவுகனை சான்றுபடுத்துவதுடன் தொடர்புடைய மூல ஆவணங்கள்.

## 3 நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பெறுபேறுகள் ரூபா 123,638,759 ஆன வரிக்கு முன்னரான தேறிய நட்டமாக இருந்ததுடன், அதனுடன் தொடர்புடைய கடந்த வருடத்தின் வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 209,226,700 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 85,587,941 ஆன தேறிய நட்டத்திலான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

### 3.2.1 பொருண்மையான கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டினதும் கடந்த வருடத்தினதும் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் ஆகியன மறை பெறுமதியினை கொண்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறு.

| | 2015 சதவீதமாக | 2016 சதவீதமாக |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | (225) | (235) |
| தேறிய இலாப விகிதம் | (165) | (271) |

### 3.2.2 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை விகிதம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், அது மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த வருடத்தில் 1:0.31 எனும் நிலையில் உறுதியாக காணப்பட்டது. விரைவு விகிதம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், அது மீளாய்வாண்டின் போது 1:0.22 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அது 1:0.21 ஆக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### (அ) வாழைச்சேனை தொழிற்சாலை

2015 பெப்ரவரி 09 ஆந் திகதியில் உள்ளபடியாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட தொகை ரூபா 472,210,131 செலுத்தப்படாமையால், அத் திகதி முதல் வாழைச்சேனை தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் அத் திகதி முதல் வாழைச்சேனை தொழிற்சாலையில் எவ்வித உற்பத்தி நடவடிக்கையும் இடம்பெற்றிருக்கவில்லை.

#### (ஆ) எம்பிலிப்பிட்டிய தொழிற்சாலை

2011 திசெம்பர் 11 ஆந் திகதிய 1037 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் இந்த தொழிற்சாலையை மறுசீரமைப்பதற்காக (Restoration) மற்றும் மீள் அபிவிருத்தி (Re-development) செய்வதற்காக ரூபா 600 மில்லியன் தொகைக்கு 30 வருட காலப்பகுதிக்காக இலக்கம் 561/3, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு 05 இல் அமைந்துள்ள அரச வளங்கள் முகாமைத்துவ கம்பனி மற்றும் நெஷனல் பேபர் கம்பனி லிமிடட் ஆகிய இரு நிறுவனங்கள் மற்றும் 03/43 ஆம் இலக்கம், வென்டனோர் அவினியு, மேற்கு பர்த், மேற்கு அவுஸ்திரேலியா எனும் வியாபார முகவரியுடைய வரையறுக்கப்பட்ட பர்த் இன்ஜினியர்ஸ் என்ட் மென்டோனஸ் (தனியார்) கம்பனி ஆகியவற்றுக்கிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இணங்கிய தொகையில் ரூபா 400 மில்லியன் மாத்திரம் குத்தகையாளருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், எஞ்சிய பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. சிறிய காலப்பகுதியொன்றில் உற்பத்தி பணிகளை மேற்கொண்ட இந்த குத்தகையாளர் 2012 ஆம் ஆண்டின் போது உற்பத்திகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

உரிய முறையில் குத்தகை தவணைகள் செலுத்தப்படாமையின் காரணத்தால் அரச வளங்கள் அரச வளங்கள் மற்றும் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் சட்டமா

அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வரி உடன்படிக்கை 2014 செப்தம்பர் 25 ஆந் திகதி இரத்துத் செய்யப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம், இந்த தொழிற்சாலை உற்பத்தி பணிகளும் இடம்பெறுவதில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டதுடன், தொழிற்சாலையின் சொத்துக்களின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தற்போது அந்த திணைக்களத்தினால் அகற்றப்பட்டிருந்தனர். அவ்வாறே 2015 செப்தம்பர் 13 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தளப்பரிசோதனைகளின் பிரகாரம் அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திண்மக் கழிவு இருப்பொன்று தொழிற்சாலையில் குவிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், குத்தகை கம்பனி அவுஸ்திரேலியாவின் சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடும் கம்பனியொன்று என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், 2011 ஆம் ஆண்டின் போது எம்பிலிபிட்டிய தொழிற்சாலையின் மீள் கட்டமைப்பு செய்யும் போது அமைச்சரவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் அரசிற்கு கிடைத்திருந்த ரூபா 400 மில்லியனான தொகையில் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளும் உள்ளடங்களாக எம்பிலிபிட்டிய தொழிற்சாலைக்கு சொந்தமான அனைத்து பொறுப்புகளும் விடுவிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 04 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை பணிக்கொடை சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர படிகளை செலுத்துவதற்கு 2011 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளை இது வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. ஏனைய விடயங்கள்

(அ) எம்பிலிபிட்டிய தொழிற்சாலைக்கு சொந்தமான சுமார் 525 ஏக்கர்கள் பரப்பளவான 05 பயிர்ச்செய்கை காணிகளுக்காக பல வருடங்களாக மாற்றமடையாது காணப்படும் ரூபா 11,188,275 தொகையை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) நெஷனல் பேபர் கம்பனி லிமிடட்டிற்கு சொந்தமான இரு கடுதாசி தொழிற்சாலைகள் எம்பிலிபிட்டிய தொழிற்சாலை 2011 நவம்பர் 15 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கு அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. தற்போது நிதி குற்றப் புலனாய்வு திணைக்களம் (விசாரணை இலக்கம் FCID/145/15) மற்றும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழு (விசாரணை இலக்கம் PIC859/2015) ஆகிய நிறுவனங்களால் இது தொடர்பில விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அத்துடன், சில நிலையான சொத்துக்களை தேடிக் கண்டறிய முடியாதிருந்தது. அத்துடன் கம்பனியால் ஊடைந்த பொருட்களை அகற்றுதல் தொடர்பில் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, முழுமையாக தேய்விடப்பட்ட எனினும் பயன்படுத்தப்படும் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் ஏனைய சொத்துக்களில் கழிவுப் பெறுமதி, பயன்படு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைமை ஆகியவற்றை பொருத்தமான முறையில் மீளாய்வு செய்தல் மற்றும் சீராக்கல் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில் கம்பனிக்கு எதிராக பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டவாறு உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், சட்டரீதியான கொடுப்பனவுகள் மற்றும் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் வழக்குகளினுள் எழும் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பில் ஒதுக்கங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்களுக்கு உள்ள அக்கறை மற்றும் உடன்படிக்கை தொடர்பான தகவல்கன் கடந்த கணக்காய்விற்கு வழங்கப்பட்டிராததுடன், 2012 ஏப்ரல் 02 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் கம்பனியின் நிர்வாகத்திற்காக உரிய அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.